உ

சரஸ்வதிதுணை.

சகலகலாவல்லிமாலையென்னும்

சரஸ்வதிதோத்திரம்,

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

விளம்பரம்.

இதனால் சகலருக்கும் **அறிவிப்பது**, சென்னை, சூளை, போஸ்டைச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் **கோன்டன்** அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும், அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்கியார்டு அளவுள்ளவினோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் **அடியிற்கண்டிருக்கும் கம்பெனி** யாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோன்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

சரஸ்வதிதுணை.

குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

சகலகலாவல்லிமாலையென்னும்

சரஸ்வதிதோத்திரம்

கட்டளைக்கலித்துறை.

வெண்டாமரைக்கன்றி நின்பதந்தாங்கவென் வெள்ளையுள்ளத், தண்டாமரைக்குத் தகாதுகொலோ சகமேழுமளித், துண்டா னுறங்கவொழித் தான்பித்தாக வுண்டாக்கும்வண்ணங், கண்டான்சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே. (௧)

நாடும்பொருட்சுவை சொற்சுவைதோய்தர நாற்கவியும், பாடும்பணியிற் பணித்தருள்வாய் பங்கயாசனத்திற், கூடும்பசும்பொற் கொடியேகனதனக் குன்றுமைம்பாற், காடுஞ்சுமக்குங்கரும்பே சகலகலாவல்லியே. (௨)

அளிக்குஞ்செழுந்தமிழ் தெள்ளமுதார்ந்துன் னருட்கடலிற், குளிக்கும்படிக்கென்று கூடுங்கொலோவுளங் கொண்டு தெள்ளித், தெளிக்கும்பனுவற் புலவோர்கவிமழை சிந்தக்கண்டு, களிக்குங் கலாபமயிலே சகலகலாவல்லியே. (௩)

தூக்கும்பனுவற் றுறைதோய்ந்தகல்வியுஞ் சொற் சுவைதோய், வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலுந், தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந்நாவினின்று, காக்குங் கருணைக்கடலே சகல கலாவல்லியே. (௪)

பஞ்சப்புதந்தரு செய்யப்பாற்பதபங் கேருகமென்
னெஞ்சத்தடத்தலராத தென்னேநெடுந்தாட்கமலத்
தஞ்சத்துவசமுயர்த்தோன் செந்நாவுமகமும்வெள்ளை
கஞ்சத்தவிசொத்திருந்தாய் சகலகலாவல்லியே. (௫)

பண்ணும்பரதமுங் கல்வியுந்தீஞ்சொற் பனுவலும் யா, னெண்ணும் பொழுதெளி தெய்தநல்காயெழு தாமரையும், விண்ணும்புவியும் புனலுங் கனலும் வெங்காலு மன்பர், கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. (௬)

பாட்டும் பொருளும் பொருளாற்பொருந்தும் பய னுமென்பாற், கூட்டும்படிநின் கடைக்கணல்காயுளங்கொண்டுதொண்டர், தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பாலமுதந்தெளிக்கும்வண்ணங், காட்டும்வெள்ளோதிமப்பேடே சகல கலாவல்லியே (௭)

சொல்விற்பனமு மவதானமுங்கல்வி சொல்லவல்ல நல்வித்தையுந்தந் தடிமைகொள்வாய் நளினாசனஞ்சேர் செல்விக்கரிதன் றொருகாலமுஞ் சிதையாமை நல்கும், கல்விப்பெருஞ்செல்வப்பேறே சகலகலாவல்லியே. (௮)

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்ஞானத்தின் றோற்றமென்ன, நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார் நிலந் தோய்புழைக்கை, நற்குஞ்சரத்தின்பிடியோடரசன்னநா ணநடை, கற்கும்பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே.

கண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்டமன்ன ருமென், பண்கண்டளவிற் பணியச் செய்வாய் படைப் போன்முதலாம், விண்கண்டதெய்வம்பலகோடியுண்டே னும் விளம்பி லுன்போற், கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே. (ய)

முற்றிற்று.

உ

நாமகள் துணை

திருமயிலை வித்துவான்,

சண்முகம்பிள்ளையவர்கள் இயற்றிய

வெள்ளைக்கிழத்தி மாலை.

———(*)———

கட்டளைக்கலித்துறை.

பொன்னேயப் பொன்னினொளியே கருணைப்புகலி டமே, நின்னையமெய்திய மெய்ஞ்ஞானியருள் சேர்ந்தவ ருக், கன்னையனைத்து முதவினையாலுன் னடிபரச, மின் னேயருள்புரி வெண்டாமரைமலர் மெல்லியலே. (க)

பாட்டுகேந் தன்றொரு கம்பநன் னுடன் பனுவலுக்கன். றேட்டறு செம்பொற் சிலம்பளித்தாயுனை யோது மெய்ம்மை, நாட்டமளித்தெனையாட்கொண்டு ஞானநிலையெனுமவ், வீட்டு நெறியருள் வெண்டாமரைமலர் மெல்லியலே. (உ)

போதகத்தானும் புணரியினுனும் பொருவில்கவுட், போதகத்தானும் புராரியுமெய்ப்பொரு ளென்றுரைக்கும், சூதகத் தோங்கிய வேதத்தினந்தந் துணிதனினால், மேதகுஞானவிளக்கே வெண்டாமரைமெல்லியலே. (ங)

ஆயன்றிச்சேய்பிழை யாதென்றுரைப்ப தகைம்பெற்ற, நீயன்றிச்சீரடியேனும்பிழைத்திடுநீர்மையுண்டோ, மாயன்றிருமகன் செங்நாப்படரு மடமயிலே, வேயன்ன தோளெழில் வெண்டாமரைமலர் மெல்லியலே. (ச)

கண்ணாரமுதக்கடலேநின்னுமங்கனவினிலு, மெண்ணேற் குனதருள் வாய்ப்பதென் றேவிணை வேல்விழியாம், பெண்ணேய நீத்தவ ருள்ளத்தின்மேய பெடையனமே, விண்ணோர் பராவிய வெண்டாமரைமலர் மெல்லியலே. (ரு)

சொற்சுவைதோய்தரு கல்விப்பிரசங்கஞ் சொலுந்துணிவும், அற்புதக்கல்வியு நாற்கவிபாடு மருந்திறனும், நிற்பரசாநிற்கு மன்பர்கணேயமு நீயருள்காண், விற்பன நீடிய வெண்டாமரைமலர் மெல்லியலே. (சு)

படியொன்றிலாநின் றிருமேனியாம்பல கல்விநலன்
அடியொன்றியசிறி யேன்றனக்கிங்ங னருளுகண்டாய்
செடியொன்றியசிந் தையர்காண்பருசிற் சுகோதயமே
விடியும்பவத்தர்க்குதவும் வெண்டாமரை மெல்லியலே.

இல்லென்றெனையடை வார்க்கிவணேது மிசைந்துதவும்
நல்லதொர்செல்வந் தருவதென்றோ நளிஞசனத்தோற்
கெல்லையிலின்ப முதவுமன்னே யெழிற்றீங்கரும்பே
வில்லொளியாரம்புனையும் வெண்டாமரை மெல்லியலே.

என் றுமிங் கியாணர்க் கவித்தொடைசாத்த விசைந்தெனக்குத், துன்றியதோர்வர நல்குகண்டாய் தொலையாநிதியா, நின்றிலகுந் தெய்வமின்னே யொருநீள்வரையிணையை, வென்றிகொள் வெம்முலைமானே வெண்டாமரை மெல்லியலே. (கூ)

கன்னுணியபுயக் காகுத்தன்காதையைக்காசினிமேன், முன்னுடிக்கம்பநன் னுடன்றன் வாக்கின் மொழிந்தனையால், என்னுவினின்று மதனுரையிஞ்ஞான் றியம்புகண்டாய், மின்னுண்படி வைத்து வெண்டாமரைமலர் மெல்லியலே. (கO)

முற்றிற்று.

விளம்பரம்.

அற்புத பூலோகரம்பை கதை.

இதனால் சகலமான கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இதுவரையிலும் வெளிவந்திருக்கும் அராபிக்கதை, பாரீஸ்கதை, குலோபகாவலிகதை நான்குபக்கிரிகள் கதை இன்னும் சில சக்கிரவர்த்திகள் கதைமுதலானதும் அவரவர்கள் வாசித்தும் பிறரால் சொலக்கேட்டும் இருப்பீர்கள் ஆகையால் ஷை கதைகளைப்போன்ற ஆயிரம்கதைகளை ஒன்றுய்த்திரட்டி உருக்கிவார்த்ததைப்போல் இப்போது ஏற்படுத்தியிருக்கும் (அற்புத பூலோகரம்பைகதை என்னும் தலைப்புபெயர்கொண்ட ஷை கதையானது மானிடமென்னும் நமது அருமையான பிறவிக்கு கற்பகத்தருவைப்போல் கிடைத்திருக்கிறதென்றறிக இக்கதையை தாங்களே படித்தாவது பிறரால் சொல்லவாவது கேட்பீர்களாகில் இரும்பைக் காந்தமிழுக்கும் பாவனைபோல் ஐம்புலன்களையும் தன்வசத்தில் இழுத்துக்கொள்ளுவது மன்றி ஆனந்தபரவசமாய் அவரவர் மனதை உருகச் செய்யுமென்பது திண்ணம் மேலும் இதில் அடங்கிய சாராம்சங்களை விவரிக்குமிடத்து மகா அற்புதமாயிருக்கும் அதாவது.

ஐயாவே! இந்தக்கதையில் ஆங்காங்கு சந்திக்கும் நவரச அலங்காரங்களை முற்றும் விவரித்தெழுத இடமில்லாமையால் இம்மட்டில் விடப்பட்டது. இளேஸ்காகிதத்தில் உயர்ந்த பயிண்டு செய்தது.

இதன் விலை ரூபா. 1 0 0.